OS.No. 105/2011

Dated : 28-06-2023

Time: 11.14 a.m to 11.30 a.m

PW- 1 சாட்சி பரமேஸ்வரி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 1ம் பிரதிவாதி சார்பாக குறுக்கு விசாரணை

குறுக்கு விசாரணை:

1. 1ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதிக்கு எழுதிவைத்த கிரயபத்திரம் எப்போது தெரியும் என்றால் கிரயம் எழுதி 6 மாதம் கழித்து தெரியும். அது எவ்வாறு என்றால் விற்றதாக சொன்ன விவரம் கேட்டு வில்லங்க சான்றிதழ் பார்த்த வகையில் தெரிந்து கொண்டேன். வில்லங்கம் பார்த்த தேதி தற்போது ஞாபகமில்லை. அந்த வில்லங்கத்தை வழக்கில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேன். ஆனால் மேற்படி கிரயம் பற்றி தெரிந்த கொண்ட தேதி விவரத்தை என்னுடைய முதன்மை விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

2. மேற்படி அந்த கிரயத்தின் சான்று நகல் எப்போது வாங்கினேன் என்றால் கிரயம் ஏற்படுத்தப்பட்ட 6 மாதம் கழித்து வாங்கினேன். அது எந்த தேதியில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் 2022 ல் தாக்கல் செய்ப்பட்டது. நான் பரமேஸ்வரி என தமிழிலும் கையெழுத்து செய்வேன் என்றால் திருமணத்திற்கு முன்பு தமிழிலும், திருமணத்திற்கு பிறகு ஆங்கிலத்திலும் கையெழுத்திடுவேன். 2003 ம் ஆண்டு என் சகோதரர்கள் 1,2 பிரதிவாதிகள் தாவா சொத்து குறித்து கடன் வாங்கும் நடவடிக்கை குறித்து மேற்கொண்டார்களா என்றால் அது பற்றி தெரியாது.

3. அந்த கடனுக்காக நானும் என் தாயாரும் ஒரு பிரமாண வாக்குமூலம் எழுதிகொடுத்துள்ளோம் என்றால் அவ்வாறு இல்லை. மேற்படி நான் என் சகோதரர்களுக்கு வழக்கு சொத்து குறித்து ஆவணத்தை ஏற்படுத்திக்கொள்ள ஆட்சேபனை இல்லை என எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் அது தவறு. ஏற்கனவே என் சகோதரர்களுக்கு நான் பாக விடுதலை பத்திரம் எழுதிகொடுத்துள்ளேன் என அதனடிப்படையில்தான் அவர்கள் விற்பனை செய்தார்கள் என்றால் அது தவறு. நான் தாவா சொத்தில் சுவாதினத்தில் இல்லை என்றால் அது தவறு. மேற்படி சொத்தின் சுவாதினத்தில் நான் இருந்திருந்தால் மேற்படி கிரயத்தை நான் அப்போதே ஆட்சேபனை செய்திருப்பேன் என்றால் அது தவறு, அந்த கிரயம் பற்றி தெரியாது. நான் பொய் வழக்கு போட்டு, பொய் சாட்சியம் அளிப்பதால் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் அது தவறு.

6ம் பிரதிவாதி சார்பாக குறுக்குவிசாரணை

முறையான ஆவணங்களை முன்னிருத்திதான் கிரயம் ஏற்படுத்தப்பட்டது என்றும்,

எனவே 6ம் பிரதிவாதிக்கு எதிராக இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

4ம் பிரதிவாதி சார்பாக குறுக்குவிசாரணை

மேற்படி நான் இவ்வழக்கை காலம் கடந்து தாக்கல் செய்துள்ளதால் என்னுடைய வழக்கு காலதோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் அது தவறு.

மறுவிசாரணை இல்லை.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

**Sd/-K.Ananthan**
**Subordinate Judge,**
**Attur.**